1981 மே 13] [திரு. நா. சுந்தரராஜ்]

கொண்டீர்கள் என்ற அடிப்படையிலே தான் அவர்கள் அமர்ந்தார்கள். அமைச்சர் சொன்னது உங்களுடைய கருத்தை ஏற்கிறேன் உங்களுடைய எதிர்ப்பை ஏற்கவில்லை என்று சொன்னார்கள். ஆகவே எதிர்ப்பை அவர்கள் சொல்கிற வகையில் ஆய்வு செய்வதற்கு முன்பே அனுமதியை மீண்டும் தந்துவிடுவது துணையாக இருக்கும். எதிர்க்கட்சியினுடைய உரிமை என்பது வேறு நீங்கள் ஸ்டீம்ரோலர் அடிப்படையிலே வேகமாகக் காரியங்களைச் செய்தால் சற்று சங்கடமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் தயவு செய்து பிரச்சினையை சிக்கலாக்காதீர்கள்.

It is not my private business

ஹவுஸினுடைய நேரம் வீணாகக் கூடாது என்றுதான் வேகமாக முறையாக நான் பேசுகிறேன். நீங்கள் ஸ்டீம்ரோலர் என்று சொல்கிறீர்கள்.

Don't use such words.

திரு. ரா. உமாநாத்: Tomorrow is Private Member's day We are not prepared to forego that.

(ஆ) வேளாண் விளை பொருள் அங்காடிகள் (இரண்டாம் திருத்த சட்ட முன் வடிவு 1981.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இச் சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(இ) சம்பளம் வழங்கல் இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு 1981 (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 51,1981)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் இரண்டாவது (திருத்த) (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 51/1981) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்,

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஈ) பல்கலைக்கழகக் கல்லூரித் தேர்வுகள் ஆசிரியர்களும் ஆசிரியர்கள் அல்லாத பணியாளர்களும் தேர்வின்போது மாணவர்களை கண்காணித்தல் சட்டமுன்வடிவு 1981.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, 1980 ஆம் ஆண்டு பல்கலைக் கழக-கல்லூரித் தேர்வுகள் (ஆசிரியர்களும் ஆசிரியர் அல்லாத பணியாளர்களும் தேர்வின் போது மாணவர்களைக் கண்காணித்தல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/1980) திரும்ப பெற அனுமதி கோருகிறேன்.

பல்கலைக் கழகத் தேர்வுகளைப் பொறுத்தமட்டில் பல்கலைக் கழக ஆசிரியர்கள் தாங்கள் கண்காணிக்க முடியாது என்று சொல்கிற அளவுக்கு பாய்காட் செய்கிற அளவுக்கு போராட்டம் நடத்துகின்ற முறையை கடந்த 2, 3 ஆண்டுக்காலமாக நாம் பார்த்து வந்தோம், அதனால் பரீட்சைகள் பாதிக்கப்பட்டன. அது மட்டுமல்ல மாணவர்கள் பெருமளவுக்கு பாதிக்கப்பட்டு அதனால் ஏற்பட்ட நட்டத்தையும் நாம் உணர்ந்திருக்கிறோம். ஆகவே, பல்கலைக் கழகம் தேர்வுகளை கண்காணிப்பது அவர்களுடைய கடமையாகும் என்று சொல்கிற முடிவை அரசு எடுத்து அதற்காக ஒரு சட்டத்தைக் கொண்டு வர முடிவுசெய்து அறிமுகம் செய்தோம்.

[பிற்பகல் 1.20]

ஆனால் அதை மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களும் எதிர்த்தார்கள்; கல்லூரி ஆசிரியர்கள் சங்கத்தைச் சார்ந்தவர்களும் அதை எதிர்த்தார்கள். எதிர்த்து, இனிமேல் அத்தகைய நிலைமைகளுக்கு நாங்கள் இடம் தர மாட்டோம்; நாங்கள் நல்லமுறையில் ஒத்துழைப்பு தருகிறோம் என்பதனையும் சொன்னார்கள். வேறு வகையிலே அதைப் பணி விதிகளிலே கடமையாக வருகின்ற வகையிலேயும் அரசு செய்வதற்கு அவர்கள் தங்களுடைய கருத்தைத் தெரிவித்தார்கள். ஆகவே, இப்பொழுது அரசு கல்லூரிகளின் ஆசிரியர்களுடைய பணி விதிகளிலே பணியினுடைய ஒரு பகுதியாக அதைக் கொண்டு வருவதற்கு நாம் ஒரு 'எக்சிகியூடிவ் ஆர்டர்' போடுவதற்கு, ஒரு முடிவை எடுத்திருக்கின்றோம்.